ADB



# ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கையும்

## உண்மைநிலைத் தாள்

| அட்டவணை 1. இலங்கை: அபிவிருத்திக் காட்டிகள் | |
|---|---|
| பு.அ.கு. சாராத | |
| மில்லியன்களில் சனத்தொகை | 20.20 (2008) |
| வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் (%) | 0.8 (2006–2008) |
| வயதுவந்தோர் படிப்பறிவு (%) | 91.5 (2007) |
| நகரப் பகுதிகளில் சனத்தொகையின் சதவீதம் | 15.1 (2007) |
| பு.அ.கு. | |
| நாளொன்றுக்கு அ.டொ.1.25: குறைவான வருமானத்தில் வாழும் சனத்தொகையின் சதவீதம் | 14.0 (2002) |
| தேசிய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சனத்தொகையின் சதவீதம் | 15.2 (2007) |
| 1,000 உயிர் பிறப்புகளுக்கு 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளின் இறப்புவீதம் | 21 (2007) |
| திருந்திய குடிநீர் மூலமொன்றைப் பயன்படுத்தும் சனத்தொகையின் சதவீதம் | 82 (2006) |

பு.அ.கு. = புத்தாயிரமாமாண்டு அபிவிருத்தி குறிக்கோள்

மூலம்: ஆ.அ.வ. 2009 அடிப்படைப் புள்ளி விபரங்கள், 2009, மணிலா
UNESCO 2009, புள்ளிவிபரத் தரவு நிலைய நிறுவனம்
உலக வங்கி 2009, உலக அபிவிருத்தி காட்டிகள் ஒன்லைன்

தென் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள சிறந்த சமூகக் குறிகாட்டிகளின் மத்தியில் இலங்கையின் சமூகக் குறிகாட்டிகளும் விளங்குகின்றன. ஓரளவுக்கு உலகளாவிய படிப்பறிவை நாடு சாதித்துள்ளதுடன், அனேகமாக அதிகளவில் குறிப்பாக ஆண்களுக்குச் சமமாக பெண்கள் விளங்குகின்றார்கள். கடந்த இரு தசாப்தங்களாக, பொருளாதாரத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும், திறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கும் கணிசமானளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு தசாப்தகாலத்திற்கு மேலாக 20%க்கு மேலாக தேங்கியிருந்த இலங்கையின் வறுமை மட்டங்கள் 2007க்குள் 15.2%க்கு குறைவடைந்துள்ளது. சிவில் யுத்தம், வீழ்ச்சியடையும் விவசாயச் சரீர உழைப்பின் உற்பத்தித்திறன், கிராமிய மக்களுக்கு வருமானத்தை ஈட்டும் வாய்ப்புக்கள் இன்மை, அத்துடன் கொழும்புக்கு வெளியே மிகவும் மோசமான உட்கட்டமைப்பு ஆகியனவே வறுமையைக் குறைப்பதற்கான முக்கியமான தடைகளாக விளங்குகின்றன.

குறைந்த அபிவிருத்தியடைந்த பிராந்தியங்களைக் கருத்தில் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுகின்றவாறு அரசாங்கத்தின் 10 வருட அபிவிருத்தித் திட்டம் விளங்குகின்றது. கிராமியப் பகுதிகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியையும், வாழ்வாதார ஆதரவையும் முக்கியமான கொள்கை ஆவணங்கள் ஆதரிக்கின்றன. அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார முயற்சி சீர்திருத்தமடைகின்ற அதேவேளை, நிகழ்ச்சி நிரலில் தனியார்மயமாக்கலை ஒதுக்கிவைக்கின்ற தன்மையுள்ளது.

## ஆ.அ.வங்கியுடன் உறவு

ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ஆ.அ.வ.) இணைந்தது முதல், 143 இறைமையானதும், இறைமைசாராததுமான கடன்களுக்காக அ.டொ. 4.36 பில்லியன்களையும், 229 தொழில்நுட்ப உதவிக் கருத்திட்டங்களுக்காக அ.டொ. 96.4 மில்லியன்களையும் இலங்கை பெற்றுள்ளது. 2008 டிசம்பரில் உள்ளவாறு, ஆசிய அபிவிருத்தி நிதியத்திலிருந்து (ஆ.அ.நி.) ஒரு திட்டக் கடனில் அ.டொ. 60 மில்லியன் மற்றும் ஆசிய சுனாமி நிதியத்திலிருந்து அ.டொ. 150 மில்லியன் மான்யம் ஆகியன உட்பட அ.டொ. 1.81 பில்லியன் கொண்ட மொத்த கடன் தொகைக்கான 41 நடைமுறையிலான இறைமையிலான கடன்கள் இருந்தன. சாதாரண மூலதன வளங்களில் இருந்து 10 நிதிப்படுத்தப்பட்டதுடன், ஆ.அ.நிதியத்திலிருந்து 31 நிதிப்படுத்தப்பட்டன. 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு, மொத்த நிகரக் கடன்தொகையின் 51%ஆனது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பிரதானமாக விவசாயத்திற்கு ஆதரவளிப்பதிலிருந்து இலங்கைக்கான உதவி படிப்படியாக மின்சக்தித் துறையையும், வீதிகளைக் கட்டுவதையும், கல்வியை மேம்படுத்துவதையும் நோக்கி நகர்ந்துள்ளது. உயர் கல்விக்கான அடைதலை விஸ்தரித்தல், திறன்களை மேம்படுத்துதல் அத்துடன் பாடவிதானத்தை நவீனமயப்படுத்தல் ஆகியனவற்றை கல்வித் துறைகளில் உள்ள பணி சம்பந்தப்படுத்தியுள்ளது. அ.டொ. 65 மில்லியன் கடனையும், அ.டொ. 15 மில்லியன் மான்யத்தையும் கொண்ட அ.டொ. 80 மில்லியன் கொண்ட ஆ.அ.வ. நிதிப்படுத்தலுடன் 2008இல் அறிவுக்காக கல்வி சமூகக் கருத்திட்டம் (அ.க.ச.க.) ஆரம்பமாகியது. நாட்டின் வறுமையான பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 150 இரண்டாம்நிலை பாடசாலைகளை அ.க.ச.க. தரமுயர்த்தும் என்பதுடன், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதைத் தொடரவுள்ளது. மேலதிகமாக, HIV/AIDS சுகாதாரக் கல்விக்கு கருத்திட்டம் ஆதரவளிக்கும்.

வேறு அபிவிருத்திப் பங்காளிகளுடன் பிரதானமாக ஜப்பானுடனும், ஆனால் ஜேர்மனியுடனும், ஏனையவற்றுடனும் என ஒத்துழைப்புடன் மின்சக்தித் துறையில் கணிசமானளவு மூலவளங்களை ஆ.அ.வ. மூலதனமிட்டுள்ளது. வீதிகளுக்கே ஆ.அ.வங்கியின் பாரியளவிலான பங்களிப்பு விளங்கியதுடன், இலங்கையில் முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட அடைதலிலான கடுகதி நெடுஞ்சாலையை தெற்கு போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டுகின்றது. இதன் மொத்த நீளம் 128 கிலோ மீட்டர்கள் என்பதுடன், இது தென் மாகாணத்தில் கொழும்பிலிருந்து மாத்தறையை இணைக்கின்றது.

2008 ஒக்ரோபரில் 2009–2011க்காக இலங்கைக்கான ஒரு புதிய நாட்டு பங்காண்மை மூலோபாயமொன்றை (நா.ப.மூ.) ஆ.அ.வங்கி அங்கீகரித்துள்ளது. அரசாங்கத்துடனான நெருங்கிய உசாவுகையுடன் புதிய நா.ப.மூ. வகுத்தமைக்கப்பட்டதுடன், அரசாங்கத்தின் 10 வருட அபிவிருத்தித் திட்டமான மகிந்த சிந்தனைக்கு இது ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி

2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு

## உதவியின் தாக்கம்

வடக்கு கிழக்கு சனசமூக புனருத்தாபன, அபிவிருத்திக் கருத்திட்டத்துடன் (NECORD) ஆரம்பமாகிய ஆ.அ.வங்கியின் மோதலுக்கு பிந்திய உதவியை வழங்குதல் இதுவரை மிகவும் வெற்றிகரமாகவே விளங்கியது. ஏனைய அபிவிருத்திப் பங்காளிகள் மாதிரியை நகல்படுத்துகின்றன அல்லது NECORD இன் கருத்திட்ட அமுலாக்கல் அலகுகள் ஊடாக நிதிசார் உதவியை வழங்குமாறு ஆ.அ.வங்கிக்கு கோரிக்கைவிடுத்துள்ளன. அது கட்டமைக்கப்பட்ட "கீழிருந்து மேல்" என்ற அணுகுமுறையை ஏற்றுக்கொள்கின்றது. இதன்படி, பொருளாதார வளர்ச்சிக்கும், வறுமையைக் குறைப்பதற்கும் அவசியமான சிறு அளவிலான உட்கட்டமைப்பின் வகையைச் சனசமூகங்கள் நிர்ணயிக்கின்றன. இவை பின்னர் முரண்பாடின்மைக்கும், மூலோபாயப் பெறுமதிக்கும் மாகாணக் குழுவொன்றினால் ஆராயப்படுகின்றன. சிறிய வீதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், நீர் விநியோகம் மற்றும் சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் உறைவிடம் ஆகியனவற்றுக்காக 58க்கு மேற்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டங்களும், நூற்றுக்கணக்கான சிறிய அளவிலான புனர்வாழ்வுக் கருத்திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நடைமுறையிலான அரசாங்கக் கட்டமைப்புக்களின் உபயோகமும், வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சகல பங்குதாரர்களையும் சம்பந்தப்படுத்தும் உயர்ந்தளவிலான பங்கெடுப்பு அணுகுமுறையும் வெற்றிகரமான அமுலாக்கத்திற்குப் பெரிதுமே விளக்கமளிக்கின்றன. எனினும், மக்களின் இடப்பெயர்வு, நிருமாண ஆகுசெலவுகளின் அதிகரிப்பு மற்றும் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களைக் கண்டறிவதிலுள்ள சிரமங்கள் ஆகியவற்றின் காரணமாக முன்னேற்றம் தாமதமாகியுள்ளது.

இலங்கையின் போக்குவரத்துத் துறைக்கு ஆ.அ.வங்கியின் உதவியானது பௌதீக, நிறுவனரீதியிலான மற்றும் கொள்கை மட்டுப்படுத்தல்கள் ஆகியவற்றைக் கவனத்திற்கு எடுத்துள்ளது. கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக ஆ.அ.வங்கியின் உதவியின் பங்களிப்பு 2007இல் நடத்தப்பட்ட நாட்டு உதவித் திட்ட மதிப்பாய்வில் "கணிசமானது" என மதிப்பிடப்பட்டுள்ளது. நான்கு கருத்திட்டங்கள் 1,265 கிலோ மீட்டர்கள் கொண்ட தேசிய வீதிகளைப் புனரமைத்து, தரமுயர்த்தி அத்துடன் மேம்படுத்தியுள்ளன. செயற்றிறன் ஆதாயங்களையும், ஆகுசெலவு சேமிப்புகளையும் பொறுத்தளவில் எதிர்பார்க்கப்பட்ட தாக்கங்கள் சாதிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்டுள்ள வீதிகளை போதியளவு மட்டங்களைக் கொண்ட போக்குவரத்து பயன்படுத்தியுள்ளதுடன், போக்குவரத்து வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. வாகன தொழிற்படும் ஆகுசெலவுகளும், பிரயாண நேரங்களும் குறைக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து சேவைகளும் மேம்பாடடைந்துள்ளன.

துறைக்கான ஆ.அ.வங்கியின் உதவி இலங்கையின் மின்னொளியேற்ற வீதத்தை 2003இல் விளங்கிய 67%இலிருந்து 2007க்குள் 79%க்கு அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவியுள்ளது. நடைமுறையிலான ஆ.அ.வ. நிதிப்படுத்தலிலான மின்சக்தித் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் 150,000 புதிய கிராமியக் குடித்தன இணைப்புக்களை உருவாக்கியுள்ளது. ஐந்து புதிய நெய்யரி துணை நிலையங்களைக் கட்டுவதற்கும், நடைமுறையிலான 13 நெய்யரி துணை நிலையங்களை மேம்படுத்துவதற்கும், 53.5 கிலோ மீட்டர்கள் கொண்ட புதிய மின்செலுத்தல் கம்பிகளை நிருமாணிப்பதற்கும் அரசாங்கத்திற்கு கருத்திட்டம் அனுமதியளித்துள்ளது. மின்னொளியேற்றல் வீதத்தை அதிகரிப்பதற்குப் புறம்பாக, புதிய நெய்யரி துணை நிலையங்களையும், மின்செலுத்தல் கம்பிகளைக் கட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும், அத்துடன் 2009க்குள் நடைமுறையிலான தொழில்நுட்ப நஷ்டங்களை 16.7%இலிருந்து 13.5%க்கும், 2016க்குள் 12%க்கும் குறைப்பதற்கும் நடைமுறையிலானதும், எதிர்காலத்திலானதுமான உதவி வடிவமைக்கப்பட்டுள்ளது. துறையில் மேலும் செயற்றிறன் மேம்படுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் ஆ.அ.வ. பணியாற்றுகின்றது.

தசாப்த காலங்களாக இலங்கையின் அபிவிருத்திக் கொள்கையின் மையமான தூணாக கல்வியில் மூலதனம் விளங்கியுள்ளது. கணனி ஆய்வுகூடங்கள், ஆசிரியர் பயிற்சி, பாடவிதானத்தின் முன்னேற்றம் மற்றும் பாடசாலை அடிப்படையிலான மதிப்பீட்டினையும், முகாமைத்துவத்தையும் அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை முன்னேற்றுவதன் மூலம் இரண்டாம்நிலைக் கல்வியை நவீனமயப்படுத்துவதற்கு ஆ.அ.வங்கியின் கல்வித் துறைக் கருத்திட்டங்கள் ஆதரவளிக்கின்றன. தூரக் கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், தூரக் கல்வி வலைப்பின்னலொன்றை முன்னேற்றுவதற்கு ஆ.அ.வ. ஆதரவளித்தது. கிழக்கில் உள்ள இரு மாவட்டங்கள் உட்பட குறைந்த அபிவிருத்தியடைந்த மாவட்டங்களில் இருந்து

### அட்டவணை 2. இலங்கை: பொருளாதார காட்டிகள், 2004–2008

| பொருளாதாரக் காட்டி | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|
| ஆளொருவருக்கான மொ.தே.கா. அட்லஸ் முறை (அ.டொ.) | 1,070 | 1,200 | 1,350 | 1,540 | … |
| மொ.உ.உ. வளர்ச்சி (ஆண்டொன்றுக்கு % மாற்றம்) | 5.4 | 6.2 | 7.7 | 6.8 | 6.0 |
| பா.வி.கா. (ஆண்டொன்றுக்கு % மாற்றம்) | 9.0 | 11.0 | 10.0 | 15.8 | 22.6 |
| தொழிலின்மை வீதம் (%) | 8.3 | 7.7 | 6.5 | 6.0 | 5.2 |
| பிசுக்கால் மீதி (மொ.உ.உற்பத்தி யின் %) | -7.9 | -8.4 | -8.0 | -7.7 | -6.8 |
| ஏற்றுமதியின் வளர்ச்சி (ஆண்டொன்றுக்கு % மாற்றம்) | 12.2 | 10.2 | 8.5 | 11.0 | 6.5 |
| இறக்குமதியின் வளர்ச்சி (ஆண்டொன்றுக்கு % மாற்றம்) | 19.9 | 10.8 | 15.7 | 10.2 | 24.0 |
| தற்போதைய கணக்கு மீதி (மொ.உ.உற்பத்தி யின் %) | -3.1 | -2.7 | -5.3 | -4.5 | -7.1 |
| வெளிவாரி கடன் (மொ.தே. வருமானத்தின் %) | 54.2 | 46.7 | 41.7 | 43.9 | … |

… = தரவு கிட்டவில்லை, பா.வி.கா. = பாவனையாளர் விலை காட்டி, மொ.உ.உ. = மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொ.தே.வ. = மொத்த தேசிய வருமானம்

மூலங்கள்: ஆ.அ.வ., 2009, ஆசிய அபிவிருத்தி வெளிநோக்கு, 2009, மணிலாயு,ஆ.அ.வ. பணியாளரின் மதிப்பீடுகள்
உலக வங்கி 2009 உலக அபிவிருத்தி காட்டிகள் ஒன்லைன்

### அட்டவணை 3. இலங்கை: 2008 கடன், தொழில்நுட்ப உதவி மற்றும் மானிய அங்கீகாரங்கள் (அ.டொ.மில்லியன்)

| கடன்கள் | | | | |
|---|---|---|---|---|
| இறைமை | இறைமை சாராத | தொழில்நுட்ப உதவி | மானியங்கள் | மொத்தம் |
| 149.8 | – | 1.9 | 27.2 | 178.9 |

– =…ஒன்றுமில்லை

திரண்ட கடன் வழங்கல் (2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு) : அ.டொ. 4,355.5 மில்லியன
திரண்ட பகிர்வுகள் (2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு) : அ.டொ. 3,161.7 மில்லியன

### அட்டவணை 4. இலங்கை: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு திரண்ட ஆ.அ.வ. கடன்வழங்கல்

| துறை | கடன்கள் (எண்.) | தொகை (அ.டொ. மில்லியன்) | %[a] |
|---|---|---|---|
| விவசாய மற்றும் இயற்கை வளங்கள் | 38 | 797.65 | 18.31 |
| கல்வி | 11 | 351.90 | 8.08 |
| சக்தி | 11 | 397.75 | 9.13 |
| நிதி | 20 | 483.50 | 11.10 |
| சுகாதாரம், போஷாக்கு, சமூகப் பாதுகாப்பு | 2 | 35.40 | 0.81 |
| கைத்தொழில் வர்த்தகம் | 11 | 243.15 | 5.58 |
| சட்டம், பொருளாதார முகாமைத்துவம் பொதுசனக் கொள்கை | 6 | 183.00 | 4.20 |
| பல்துறை | 17 | 439.30 | 10.09 |
| போக்குவரத்து, தொடர்பாடல் | 19 | 1,048.80 | 24.08 |
| நீர் விநியோகம், சுகாதாரம், கழிவு முகாமைத்துவம் | 8 | 375.07 | 8.61 |
| மொத்தம் | 143 | 4,355.53 | 100.00 |

[a] ஏறத்தாழ என்ற காரணத்தினால் மொத்தம் சரியான கூட்டுத்தொகையாக இருக்கமாட்டாது

### அட்டவணை 5. இலங்கை: கருத்திட்டத்தின் வெற்றியின் வீதங்கள்

| துறையினால் | சதவீதம் [u] | வீதப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின்/திட்டங்களின் எண். |
|---|---|---|
| விவசாய மற்றும் இயற்கை வளங்கள் | 28.6 | 28 |
| கல்வி | 83.3 | 6 |
| சக்தி | 85.7 | 7 |
| நிதி | 57.1 | 7 |
| சுகாதாரம், போஷாக்கு, சமூகப் பாதுகாப்பு | 100.0 | 2 |
| கைத்தொழில் வர்த்தகம் | 80.0 | 5 |
| சட்டம், பொருளாதார முகாமைத்துவம் பொதுசனக் கொள்கை | 50.0 | 2 |
| பல்துறை | 33.3 | 6 |
| போக்குவரத்து, தொடர்பாடல் | 80.0 | 5 |
| நீர்விநியோகம், சுகாதாரம், கழிவு முகாமைத்துவம் | 100.0 | 2 |
| மொத்தம் | 54.3 | 70 |
| அங்கீகாரத்தின் ஆண்டினால் | | |
| 1960s | 50.0 | 2 |
| 1970s | 41.7 | 12 |
| 1980s | 50.0 | 24 |
| 1990s | 62.1 | 29 |
| 2000s | 66.7 | 3 |

[u] முடிக்கப்பட்ட கருத்திட்ட/திட்ட அறிக்கைகளின் (PCR) சராசரி முடிவுகள் மீதான அடிப்படையில், PCR செல்லுபடியாக்கல் அறிக்கைகள் (PCRVR) மற்றும் கருத்திட்ட/திட்ட மதிப்பாய்வு அறிக்கைகள் (PPER). இது PCR மற்றும் PCRVR/PPER வீதங்கள் கிடைக்கின்ற சகல தருணங்களிலும் PCRVR அல்லது PPER வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மூலங்கள்: 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட வீதமொன்றை உள்ளடக்கும் PCRகள், PCRVRகள் மற்றும் PPERகள்

மாணவர்களை கொழும்பில் உள்ள மையத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, கற்கை விடயதானங்களை அடைவதற்கும், புதிர்களை எடுப்பதற்கும், தமது மாவட்டத்தில் அமைந்துள்ள மையமொன்றிலிருந்து பிரவேசப் பரீட்சைகளை முடிப்பதற்கும் வலைப்பின்னல் இயலச் செய்துள்ளது. இரண்டாம்நிலைக் கல்வி நவீனமயப்படுத்தும் குறிக்கோளுடன் 2005இல் இரண்டாம்நிலை கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (SEMP II) ஆரம்பமாகியதுடன், நாடு பூராவும் தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பரப்புவதற்கும், தரத்திலான இரண்டாம்நிலைக் கல்விக்கு ஒப்புரவு அடைதலை அதிகரிப்பதற்கு வகுப்பு அ மற்றும் அஆ பாடசாலைகளாக 1,200 இரண்டாம்நிலைப் பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கும் உயர்ந்த முன்னுரிமையொன்றை குறித்தொதுக்கியுள்ளது. வலய/மாகாண கல்வி அலுவலகங்களைப் பலப்படுத்துதல், 50,000 அனுகூலமற்ற மாணவர்களுக்கு ஊதியத் திட்டமொன்றைத் தொடருதல், தேசியப் பரீட்சை முறைமையை வலிமைப்படுத்தல், கல்வி அமைச்சினுள் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் ஆகியனவே கருத்திட்டத்தின் ஏனைய பிரதான துறைகளாகும்.

பாதுகாப்பான நீர் விநியோகம், சகலருக்கும் மேம்படுத்தப்பட்ட சுகாதார அடைதல் ஆகியனவே இலங்கையின் வறுமை ஒழிப்பு குறிக்கோள்களில் ஒன்றாகும் என்பதுடன், ஆ.அ.வங்கியின் உதவித்திட்டமானது 2 மில்லியன் மக்களைப் பாதுகாப்பான நீருக்கான அடைதலுக்கு உதவியளித்துள்ளது. அது நிறுவனரீதியிலான ஆற்றலளவைக் கட்டியெழுப்பியுள்ளதுடன், துறை சீர்திருத்தங்களுக்கும் ஆதரவளித்துள்ளது. 2008இல் 300,000 மக்களை உள்ளடக்கி நாட்டின் மிக வரண்ட வலயங்களில் உள்ள வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய நான்கு பாரிய பட்டினங்களுக்கு புதியதொரு கடனை ஆ.அ.வ. அங்கீகரித்துள்ளது.

## எதிர்காலத் திசைகள்

பாரிய அளவிலான உட்கட்டமைப்பிலும், அறிவுப் பொருளாதாரத்திலும் மூலதனத்தின் ஊடாக உயர்வான வளர்ச்சி வீதங்களைச் சாதிப்பதும், கிராமிய அபிவிருத்தி மீது நோக்கினைக் கொண்டிருப்பதுமே மகிந்த சிந்தனை என்ற அரசாங்கத்தின் 10 வருட அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய பாகமாகும். அடுத்த 3 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் ஆ.அ.வங்கியின் தொழிற்பாடுகள் CPS 2009-2011இனால் வழிகாட்டப்படும். வருடாந்தம் அ.டொ. 210 மில்லியன் கொண்ட கருத்திட்டத்துடன் வீதிகள், நீர் விநியோகம் மற்றும் மின்சக்தி ஆகியன உட்பட உட்கட்டமைப்பு மீது புதிய CPS நோக்கினைக் கொண்டுள்ளது. பிசுக்கால் முகாமைத்துவத்திற்கான திட்டமிடப்பட்ட திட்டமும், கல்வியில் மாற்றுநிலைக் கருத்திட்டமொன்றும் உள்ளது. இவ்விரு துறைகளும் ஆ.அ.வங்கியிலிருந்து ஏற்கனவே ஆதரவைப் பெற்றிருந்தன.

பெயரந்தப் பொருளாதார ஸ்திரத்தன்மையின்மையுடனும், அமைதியின்மையுடனும் சேர்த்து தனியார் துறை முன்னேற்றத்திற்கு இரு பாரிய தடைகளாக உட்கட்டமைப்பிமின்மையையும், தொடர்பின்மையையும் ஆ.அ.வங்கியும், உலக வங்கியும் அடையாளங் கண்டுள்ளன.

மோதலினால் வேலை பாதிக்கப்பட்டுள்ளது, ஆனால் சாத்தியமான இடங்களிலெல்லாம் தொடருகின்றது. நாட்டில் மோசமாக உதாசீனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கு அவசரமாக தேவைப்படுகின்ற அடிப்படை சமூக உட்கட்டமைப்பைக் கொண்டு வருகின்ற நாட்டின் கிழக்கில் உள்ள நடைமுறையிலான கருத்திட்டங்கள் (மட்டக்களப்பு நீர் விநியோகம் போன்ற) மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

## தொழிற்பாட்டிலான சவால்கள்

இலங்கையின் கல்விச் சாதனைகள் கணிசமானளவு என்பதுடன், பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்கு மாறாக, தனியார் துறை வளர்ச்சிக்கு பாரிய தடையாக ஊழல் கண்டறியப்படவில்லை.

கிழக்கின் துரிதமடைகின்ற பணியுடனும், பாரிய இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள வடக்கில் பணி மீள ஆரம்பமாகும் சாத்தியக்கூறுடனும் சனசமூகங்களுக்கு இடையில் கெடுபிடிநிலைகளைக் கருத்திட்டங்கள் மோசமாக்க மாட்டா என்பது முக்கியமானது என்பதுடன், அவற்றைக் குறைப்பதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. சிவில் சமூகமும், தொழிற்சங்கங்களும் மிகவும் தீவிரமான பங்கினை ஆற்றுவதுடன், இத்தகைய பங்குதாரர்களுடன் முழுமையாக ஆலோசனை நடத்தப்பட்டு, சாத்தியமானளவு ஒற்றுமை தோற்றுவிக்கப்படுவதை கருத்திட்டங்கள் உறுதிப்படுத்த வேண்டும். அமுலாக்கல் தாமதங்களுக்கு அநேக வேளைகளில் காரணமொன்றாக விளங்குகின்ற நீண்ட கொள்வனவு நடைமுறைகள் இசைவாக்கத்தினதும், அனுகுமுறைகளை வலிமைப்படுத்துதலினதும் மூலம் தற்போது கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன.

### அட்டவணை 6. இலங்கை: இறைமையிலான கடன் வழங்கலுக்கான திரட்டுச் செயற்றிறன் தர காட்டிகள், 2007–2008

| | | |
|---|---|---|
| நடைமுறையிலான கடன்களின் எண்ணிக்கை (2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு) | | 41 |
| | 2007 (அ.டொ.மில்லியன்) | 2008 (அ.டொ.மில்லியன்) |
| ஒப்பந்த வழங்கல்கள்/ ஒப்படைப்புகள் | 116.0 | 611.0 |
| செலவழித்த தொகைகள் | 137.8 | 249.5 |
| அபாயத்திலுள்ள கடன்கள் (%) | 15.2 | 4.9 |

### அட்டவணை 7. இலங்கை: ஆ.அ.வ. கடன் கருத்திட்டங்களில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்/விநியோகஸ்தர்கள் 2004 ஜனவரி 01–2008 டிசம்பர் 31

| ஒப்பந்தக்காரர்கள்/ விநியோகஸ்தர்கள் | துறை | ஒப்பந்தத் தொகை (அ.டொ. மில்லியன்) |
|---|---|---|
| கியாங்னாம் என்ரர்பிறைசஸ், லிமிற். | போக்குவரத்தும், தொடர்பாடலும் | 90.40 |
| சைனா ஜியோ-சல்கொன்-அக்ஸஸ் ஜேவி | நீர் விநியோகம், சுகாதாரம், மற்றும் கழிவு முகாமைத்துவம் | 52.22 |
| தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | நீர் விநியோகம், சுகாதாரம், மற்றும் கழிவு முகாமைத்துவம் | 22.72 |
| சியெரா கொன்ஸ்ரக்ஷன் கம்பனி லிமிற். | பல்துறை | 21.69 |
| ஐசிசி சீன துறைமுக இணை முயற்சி | போக்குவரத்தும், தொடர்பாடலும் | 19.73 |
| சர்வதேச நிருமாண ஒன்றியம் | பல்துறை | 19.58 |
| கன்சல்ரிங் என்ஜினியரிங் அன்ட் கொன்ட்ரக்டர்ஸ் (பிறை) லிமிற். | பல்துறை | 19.23 |
| கே.டி.எ. வீரசிங்க அன்ட் கம்பனி | போக்குவரத்தும், தொடர்பாடலும் | 14.68 |
| இ.டபிள்யு.இன்போர்மேசன் சிஸ்ரம், லிமிற். | பல்துறை | 13.12 |
| ஹொவேல் கொன்ஸ்ரக்ஷன் (பிறை) லிமிற். | போக்குவரத்தும், தொடர்பாடலும் | 11.11 |

### அட்டவணை 8. ஆ.அ.வ. கடன் திட்டங்களில் சம்பந்தப்பட்ட உயர் உசாவலர்கள் (தனிப்பட்ட உசாவலர்கள் மற்றும் உசாவுகை நிறுவனங்கள்), 2004 ஜனவரி 01–2008 டிசம்பர் 31

| உசாவலர் | ஒப்பந்தப்படுத்தப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை | ஒப்பந்தத் தொகை (அ.டொ.மில்லியன்) |
|---|---|---|
| பிறைஸ்வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிறை. லிமிற். | 4 | 3.85 |
| றிசோசஸ் டெவலப்மென்ற் கொன்சல்ரன்ற்ஸ் லிமிற். | 5 | 1.61 |
| இலங்கையின் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்* | 34 | 1.20 |
| கிறின் ரெக் கொன்சல்ரன்ஸ் (பிறை) லிமிற். | 3 | 0.60 |
| இலங்கை மத்திய வங்கி | 2 | 0.50 |
| கைத்தொழில் சேவைகள் பணியகம் | 1 | 0.26 |
| ITDG | 1 | 0.26 |
| ஆக்கிரெக்யுரல் என்ஜினியரிங் கன்சல்ரன்ஸி | 1 | 0.20 |
| அக்ரோமாட் மன்றம் | 1 | 0.20 |
| சர்வோதய பொருளாதார வியாபார முயற்சி அபிவிருத்தி சேவைகள் | 2 | 0.14 |

* உள்ளடக்கப்பட்டுள்ள காலத்தினுள் ஒன்று அலலது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை உசாவலர் கொண்டிருக்கக்கூடும்.

### அட்டவணை 9. இலங்கை: ஆ.அ.வ. தொழில்நுட்ப உதவிக் கருத்திட்டங்களில் சம்பந்தப்பட்ட உயர் உசாவலர்கள் (தனிப்பட்ட உசாவலர்கள் மற்றும் உசாவுகை நிறுவனங்கள்), 2004 ஜனவரி 01–2008 டிசம்பர் 31

| உசாவலர் | ஒப்பந்தப்படுத்தப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை | ஒப்பந்த தொகை (அ.டொ. மில்லியன்) |
|---|---|---|
| இலங்கையின் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்* | 70 | 1.79 |
| பிறைஸ்வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் பிறை. லிமிற். | 3 | 1.38 |
| இன்போரெக் - ஐடியாஸ் பிறை. லிமிற். | 1 | 0.42 |
| வறுமை ஆய்வு நிலையம் (CEPA) | 2 | 0.35 |
| ஏனர்ஜி போறம் (கரன்டி) லிமிற் | 1 | 0.33 |
| சஹனய தேசிய உளவியல் சுகாதார சபை | 1 | 0.06 |

* உள்ளடக்கப்பட்டுள்ள காலத்தினுள் ஒன்று அலலது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை உசாவலர் கொண்டிருக்கக்கூடும்.

## பங்காண்மை

இலங்கையில் அபிவிருத்தி பங்காளிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு தொடர்ந்தும் மிகச் சிறந்ததாக இருப்பதுடன், சுனாமி தொடர்பான மீள்நிருமாண முயற்சிகளினால் பலமடைந்துள்ளது. கொள்கை நடுநிலைமையை உறுதிப்படுத்துவதற்காகவும், இரட்டிப்புத்தன்மையை தவிர்ப்பதற்காகவும் கொள்கை மற்றும் மூலோபாய விடயங்களுடன் ஆ.அ.வ. நெருக்கமாக ஒன்றிணைந்துள்ளது. 2007இல், உலக வங்கியுடன் இணைந்து புதிய நா.ப.மூலோபாயத்திற்காக சூழல் மதிப்பீட்டினை ஆ.அ.வ. தயாரித்தது.

இலங்கையில் சிவில் சமூகத் தாபனங்கள் வழங்கும் சேவைகளின் பயனுறுதிதன்மையையும், தரத்தையும் மற்றும் நிலைத்திருக்கும்தன்மையையும் பலப்படுத்துவதற்காக அவற்றுடன் ஆ.அ.வ. விஸ்தாரமான விதத்தில் ஒத்துழைக்கின்றது. உதாரணமாக, சனசமூக அடிப்படையிலான தாபனங்களுடனும், உள்ளூராட்சி சபைகளுடனும் இணைந்து அரச சார்பற்ற தாபனங்கள் இரண்டாம்நிலைப் பட்டினங்கள், கிராமிய சனசமூக நீர் விநியோக, சுகாதாரக் கருத்திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்தில் கிராமிய நீர் விநியோகத் திட்டத்தை அமுல்படுத்தும்.

சிறந்த நடைமுறைகளை அடையாளங் காண்பதற்கும், தொடர்பாடலை மேம்படுத்துவதற்கும் 2007இல் சகல பங்குதாரர்களுடனான உசாவுகையுடன் இலங்கையில் ஆ.அ.வங்கிக்காக உசாவுகை, பங்கெடுப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2008இல் முக்கிய மூலோபாயப் பங்குதாரர்களை அடையாளங் காண்பதை மேலும் விருத்தி செய்வதற்காக இலங்கை வதிவிட செயற்பணி அலுவலகப் பணியாளருடன் ஆரம்ப பங்குதாரர் பகுப்பாய்வு செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

## இணை நிதிப்படுத்தலும், கொள்வனவும்

ஆ.அ.வங்கி கருத்திட்டங்களை நிதிப்படுத்துவதில் பங்கெடுப்பதற்காக ஆ.அ.வங்கியின் பங்காளர்களான அரசாங்கம் அல்லது அவற்றின் முகராண்மைகள், பரஸ்பர நிதிப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக தாபனங்கள் ஆகியனவற்றை இணை நிதிப்படுத்தல் செயற்பாடுகள் இயலச்செய்கின்றன. மானியங்கள், உத்தியோகபூர்வ கடன்கள் அல்லது கடன் மேம்படுத்தல் உற்பத்திகள் என்ற அமைப்பில் மேலதிகமான நிதியங்கள் வழங்கப்படுகின்றன.
2008ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இலங்கைக்கு திரண்ட நேரடியான பெறுமதி சேர்க்கப்பட்ட இணை நிதிப்படுத்தல் 26 மூலதன கருத்திட்டங்களுக்கு அ.டொ. 857.3 மில்லியன் என்பதுடன், 25 தொழில்நுட்ப உதவியிலான கருத்திட்டங்களுக்கு அ.டொ. 9.9 மில்லியன் ஆகும்.

2008இல் உலர் வலய நகர நீர், சுகாதாரக் கருத்திட்டத்திற்காக நீர் நிதிப்படுத்தல் பங்காண்மை வசதியின் கீழ் இணை நிதிப்படுத்தலுக்காக அ.டொ. 2.0 மில்லியன் மானியத்தை நெதர்லாந்து வழங்கியது.

2004 ஜனவரி 1 முதல் 2008 டிசம்பர் 31 வரை இணை நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களின் சுருக்கமொன்று பின்வரும் இணையளத்தில் கிட்டும்: www.adb.org/Documents/Fact Sheets/ Srilanka/cofinancing.asp.

2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு, அ.டொ. 4.17 பில்லியன் பெறுமதியிலான ஆ.அ.வ. கடன் கருத்திட்டங்களின் கீழ் 10,330 உசாவுகை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் அ.டொ. 34.9 மில்லியன் பெறுமதியான 463 ஒப்பந்தங்கள் இலங்கையில் உள்ள உசாவலர்களுக்கு வழங்கப்பட்டன.

1985 ஜனவரி 1 முதல் 2008 டிசம்பர் 31 வரை அ.டொ. 2.33 பில்லியன் பெறுமதியிலான ஆ.அ.வ. தொழில்நுட்ப உதவிக் கருத்திட்டங்களின் கீழ் 18,104 உசாவுகை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் அ.டொ. 15.0 மில்லியன் பெறுமதியான 262 ஒப்பந்தங்கள் இலங்கையில் உள்ள உசாவலர்களுக்கு வழங்கப்பட்டன.

பொருட்களுக்கும் மற்றும் வேலைகளுக்கும் மற்றும் உசாவுகைச் சேவைகளுக்கும் இலங்கையில் உள்ள நிறுவனங்களுக்கும், உசாவலர்களுக்கும் வழங்கப்பட்ட கொள்வனவு ஒப்பந்தங்களின் சுருக்கமொன்று பின்வரும் விலாசத்தில் காணப்படுகின்றது: www.adb.org/Documents/Fact Sheets/Srilanka/procurement.asp

### இலங்கை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி பற்றி

பிராந்திய உறுப்பினர்கள் மத்தியில் 16 பாரிய பங்குடமையாளராகவும், முழு அளவில் 24ஆவது பாரிய பங்குடமையாளராகவும் இலங்கை விளங்குகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கத்துவம்

| | |
|---|---|
| இணைந்தது | 1966 |
| தக்கவைக்கப்பட்டுள்ள பங்குகள் | 20,520 (0.58%) |
| வாக்குகள் | 33,752 (0.76%) |

குயங்-ஹோ கிம் நிறைவேற்று இயக்குனராக விளங்குகினற வேளை ஜேம்ஸ் சுவன்-ஹுவா ஷு மாற்று நிறைவேற்று இயக்குனராக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குனர் சபையில் இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்துகினறனர்.

ரிச்சர்ட் டபிள்யு.எ.வோக்ஸ் இலங்கைக்கான ஆ.அ.வ. நாட்டுப் பணிப்பாளராக ரிச்சர்ட் டபிள்யு. எ.வோக்ஸ் விளங்குகின்றார். 1998இல் இலங்கை வதிவிட செயற்பணி அலுவலகம் திறக்கப்பட்டதுடன், அதன் செயற்பாடுகளில் ஆ.அ.வங்கிக்கும், அரசாங்கத்திற்கும், தனியார் துறைக்கும், சிவில்-சமூக பங்குடமையாளர்களுக்கும் இடையில் ஆரம்பநிலைத் தொழிற்பாட்டு இணைப்பினை வழங்குகின்றது. இலங்கை வதிவிட செயற்பணி அலுவலகம் கொள்கைக் கலந்தாய்வில் ஈடுபட்டுள்ளதுடன், இலங்கையில் அபிவிருத்திப் பிரச்சனைகள் மீது அறிவுத் தளமொன்றாகவும் செயற்படுகின்றது.

ஆ.அ.வ. அலுவல்களைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் முகவராண்மையாக நிதி, திட்டமிடல் அமைச்சு விளங்குகின்றது.

### ஆசிய அபிவிருத்தி வங்கி பற்றி

பிராந்தியத்திலிருந்து 48, உலகின் வேறு பாகங்களிலிருந்து 19 என 67 உறுப்பினர்களினால் சொந்தமாகக் கொள்ளப்பட்டுள்ள பல்தரப்பு அபிவிருத்தி வங்கியொன்றே ஆ.அ.வங்கியாகும். கொள்கைக் கலந்தாய்வு, கடன்கள், ஒப்புரவு மூலதனங்கள், உத்தரவாதங்கள், மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியனவே அதன் அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடுகளுக்கு உதவுவதற்கான ஆ.அ.வங்கியின் பிரதான கருவிகளாகும். 2008இல், இரவல் வழங்கும் தொகை அ.டொ. 10.49 பில்லியன் (86 கருத்திட்டங்கள்) தொழில்நுட்ப உதவி அ.டொ. 274.5 மில்லியன் (299 கருத்திட்டங்கள்) மற்றும் மான்ய நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள் அ.டொ. 11.4 மில்லியன் (49 கருத்திட்டங்கள்) ஆகும். நிதிப்படுத்தல் பங்காண்மை தொழிற்பாடுகளிலிருந்து நேரடியான பெறுமதி சேர்க்கப்பட்ட இணை நிதிப்படுத்தலில் இது அ.டொ. 1.65 பில்லியனைத் தோற்றுவித்தது. கடந்த 5 வருடங்களுக்கு மேலாக (2004-2008) ஆ.அ.வங்கியின் வருடாந்த இரவல்வழங்கல் தொகை சராசரியாக அ.டொ. 7.70 பில்லியனாகவும், தொழில்நுட்ப உதவி சராசரியாக அ.டொ. 231.5 மில்லியனாகவும், மான்ய நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள் அ.டொ. 655.1 மில்லியனாகவும் விளங்கின. 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறு, 41 நாடுகளில் 2,147 கருத்திட்டங்களில் திரண்ட மொத்தங்கள் அ.டொ. 143.53 பில்லியன் ஆகும். 263 மான்யக் கருத்திட்டங்களுக்கு அ.டொ. 4.08 பில்லியன் ஆகும். 6,599 தொழில்நுட்ப உதவிக் கருத்திட்டங்களுக்கு அ.டொ. 3.55 பில்லியன் ஆகும்.

### தொடர்புகள்

**இலங்கை வதிவிட செயற்பணி அலுவலகம்**
49/14–15 காலி வீதி,
கொழும்பு 3, இலங்கை.
தொலைபேசி: +94 11 238 7055
பக்ஸ்: +94 11 238 6527
adbslrm@adb.org
www.adb.org/SLRM

**ஆ.அ.வ. தலைமையலுவலகம்**
6 ADB அவென்யு, மன்டலுயொங் நகரம்
1550 மெற்றோ மணிலா, பிலிப்பைன்ஸ்
தொலைபேசி +63 2 632 4444
பக்ஸ்: +63 2 636 2444
information@adb.org

**நிதி, திட்டமிடல் அமைச்சு**
த.பெ.இல. 277, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி +94 11 248 4500/248 4600/248 4700
பக்ஸ்: +94 11 244 9823/242 2507/244 7633
www.treasury.gov.lk

**பயனுள்ள ஆ.அ.வ. இணையதளங்கள்**

ஆசிய அபிவிருத்தி வங்கி
**www.adb.org**

நாட்டு இணையதளம்
**www.adb.org/srilanka**

ஆசிய அபிவிருத்தி வெளிநோக்கு
**www.adb.org/Documents/Books/ADO/2009/SRI.pdf**

வருடாந்த அறிக்கை
**www.adb.org/Documents/reports/annual_report/2008/**

வைப்பக நூலகங்கள்
**www.adb.org/Publications/Depositories/sri.asp**

இந்த வெளியீட்டில் அமெரிக்க டொலர்களையே அ.டொ. குறிக்கின்றது.
வேறு வகையில் எடுத்துக்காட்டப்பட்டாலன்றி தரவுகள் 2008 டிசம்பர் 31இல் உள்ளவாறானதாகும். உண்மை நிலைத் தாள்கள் வருடாந்தம் மார்ச்சில் புதுப்பிக்கப்படுகின்றன.

2009 ஏப்ரல்